**செய்தி வெளியீடு எண்:517** **நாள்: 08.08.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7.8.2017 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், நல்லம்பள்ளி கிராமத்தில் 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 சேமிப்புக் கிடங்குகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டையில் 6 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 கூடுதல் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோயம்புத்தூர் நகர கூட்டுறவு வங்கியின் இராமநாதபுரம் கிளை அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் முக்கியச் செயல்பாடு, விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு, விளைபொருட்களின் சேமிப்பு இழப்பினைத் தடுப்பதற்காக விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது ஆகும். மேலும், இந்நிறுவனம் அதன் சேமிப்புக் கிடங்குகளிலும் வணிகம் சார் பணியாக பல்வேறு அரசு மற்றும் தனியார் கட்டடங்களிலும் பூச்சித் தாக்குதல் தடுப்புப் பணிகள் மற்றும் பூச்சிக்கொல்லி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகள், இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சர்க்கரை ஆலைகள், உர உற்பத்தி நிறுவனங்கள், வணிகர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 6.5.2013 அன்று சட்டப்பேரவை விதி எண்.110–ன் கீழ், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் வாயிலாக 1.25 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், நல்லம்பள்ளி கிராமத்தில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலா 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவில், மொத்தம் 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவு

கொண்ட 3 சேமிப்புக் கிடங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் 6 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 3,500 மெட்ரிக் டன் கொள்ளளவில், மொத்தம் 7,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 கூடுதல் சேமிப்புக் கிடங்குகள்;

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோயம்புத்தூர் நகர கூட்டுறவு வங்கியின் இராமநாதபுரம் கிளை அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 24 கோடியே 1 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 சேமிப்புக் கிடங்குகள் மற்றும் கோயம்புத்தூர் நகர கூட்டுறவு வங்கியின் இராமநாதபுரம் கிளை அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜு, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.கே.நாகராஜன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) திருமதி சோ.மதுமதி இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 8.8.2017**